உ

RECEIVED 21-11-1986

# நாவலர் குரல்

குரல் 1 கார்த்திகை 19 1985-12-04 ஒலி 1
விலை: நாவலர் புகழ் பரப்பும் நல்ல தமிழ் ஏடு ரூபா 2-00

# நாவலர் மீண்டும் வரவேண்டும்

**பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை ஐயா வேண்டுகோள்**



நல்லூர்க் கந்த சுவாமி கோயிலுக்கு அருகில் சிலை உருவில் மணிமண்டபத்தில் வீற்றிருந்த நாவலர் பெருமான் நல்லூர் பற்றித்தாம் முன்னர் கூறிய திருத்தங்களை மீண்டும் அதேயிடத்தில் இருந்து சொல்லிக் கொண்டேயிருப்பாரேயானால், நாவலர் பெருமான் கூறிய திருத்தங்கள் காலகதியிலேனும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் மேற்கொள்ளப்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## முழக்கம்

### அறிஞர் குரல்கேட்டு அகற்றிய சிலையை மீளநிறுவுக

தமிழும் சைவமும் தழைத்தோங்க நல்லைநகர் ஆறுமுக நாவலர் தோன்றினார். அகப்பகைகளை எளிதாக வென்ற நாவலர் பெருமானால் தமிழுக்கும் சைவநெறிக்கும் எதிரான புறப்பகைகளை வெல்லமுடியவில்லை. அதற்காக அவர் நிறைந்த தியாகங்களைச் செய்யவேண்டியிருந்தது. வாழ்வு முழுவதும் தூய பிரமச்சாரியாக இருந்து அவர் தமிழுக்கும் சைவத்திற்கும் அளப்பரிய தொண்டாற்றினார்.

பாற்கடலுள் இருக்கும் மீனுக்குப் பாற்கடலின் சிறப்புத் தெரியாது என்பது சைவசித்தாந்த உவமை. இது போல நாவலரின் பணிகளால் விளைந்த நன்மையாகிய கடலுள் அமிழ்ந்திருக்கும் எமக்கு நாவலர் பெருமை பற்றிய உணர்வு இல்லாமை போன்ற ஒடுக்க நிலை இருப்பது வியப்பல்ல. ஆனால், இதனை உணராது, தூங்கும் புலி மீது இடறிவிழும் குருடர் போன்றோரின் செயலினால் விபரீதமே நிகழும். தமிழ் மக்களதும் சைவநெறியில் நிற்போரதும் உணர்வுகளை ஒன்று திரட்டி நாவலரின் தூய பணிகளைத் தொடர்வதற்கு வழிகாட்டுவதும் நாவலர் பெருமையை ஒடுக்க நினைப்போரை, செயற்படுத்துவோரை அம்பலப்படுத்துவதும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணி மன்றம் என்ற நிறுவனத்தின் நோக்கமாகும். இந்நிறுவனத்தின் பணிகளுக்கு உறுதுணையாக நாவலர் குரல் ஓங்கி ஒலிக்கும்.

ஊர்கோலம் கொள்ள நிறுவப்பட்ட நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை மணிமண்டபத்திலிருந்து திருட்டுத்தனமாக அகற்றப்பட்டுவிட்டது. அதனை மீள அதே இடத்தில் நிறுவ மக்கள் சக்தியை ஒன்று திரட்டுவதே நாவலர் குரலின் இன்றைய பணி. இது நாவலர் பெருமானுக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

நாவலர் பெருமானின் திருவுருவச் சிலையை மீண்டும் நல்லை முருகப்பிரானின் தெற்கு வீதியிலே முறைப்படி பிரதிட்டை செய்ய அதனை அகற்றியோர் மனமுவந்து முன்வர வேண்டும் என்று நாவலர் குரல் தொடர்புடையோரை வேண்டுகிறது. இதன் மூலம் அவர்கள் சமூகத்தில் இழந்த பெருமையை மீளப் பெறமுடியும்.

இவ்விதழ் நாவலர் சிலை அகற்றலை எதிர்ப்பவர்கள் சில தனிமனிதர்களல்ல. சைவ-தமிழ் உலகத்தின் பல்வேறு துறையினர், தமிழ்- சைவ உலகுக்கு வழிகாட்டும் ஒளி விளக்குகள் என்பதைப் புலப்படுத்தும். இவர்கள் வழங்கியிருக்கும் ஒளியிலே விழிபெற்று, பார்வை பெற்று நல்லதைச் செய்ய வேண்டுமென்று சிலை அகற்றிய பெரியோர்களை வேண்டுகிறோம்.

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் மீண்டும்...
(1ஆம் பக்க தொடர்ச்சி

படலாம் என்பதே எனது கருத்தாகும். இவ்வாறு நாவலர் மரபின் இன்றைய கொழுந்தாக வாழும் தவமுனிவர் பண்டிதமணி இலக்கிய கலாநிதி **சி. கணபதிப்பிள்ளை ஐயா** அவர்கள் வீரகேசரி வார மலரில் எழுதிய கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார்.

பண்டிதமணி ஐயா அக் கட்டுரையில் பின்வருமாறு தொடர்கிறார்:

"நாவலர் ஐயாவுக்கு இனியும் இங்கே இடமுண்டா?" என்ற தலைப்பில் கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்கள் 13-10-85 ஞாயிறு வீரகேசரியில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

அக்கட்டுரையில் எனது பெயர் பல இடங்களில் உபயோகிக்கப்பட்டுள்ளது. கட்டுரையின் இறுதியில்,

"தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பவனிசென்று தம் இஷ்ட தெய்வத்தின் சந்நிதியிலே, தான் திருவாவடுதுறை ஓதுவார்களைக் கொண்டு தேவார பாராயணமும் மாகேசுர பூசையும் நடத்துவித்த தெற்கு வீதியிலே எழுந்தருளி இருந்த நாவலர் பெருமானை – ஐந்தாங்குரவரை – தமிழ்ப் பேரறிஞரை – தேசியத் தலைவரை எந்தவிதமாக அப்புறப்படுத்தினார்கள் என்பதைக் கேட்க இன்று யாரும் இல்லையோ? நாவலர் ஐயாவுக்கு இனியும் இங்கே இடமில்லை என்று எல்லோரும் மௌனம் பூண்டுவிட்டார்களா?

இந்நிகழ்ச்சியை அறிந்த ஒரு பேருள்ளம் திருநெல்வேலியிலே நிச்சயமாக அழுதுகொண்டிருக்கும். அவ்வுள்ளம் நாவலர் உள்ளம். இன்றைய நிலையிலே அவ்வுள்ளம் வாய்விட்டு யாது கூறுமோ? நாவலர் பெருமானை எங்களுக்கெல்லாம் அறிமுகம் செய்துவைத்தது அவ்வுள்ளம்" – என்ற பகுதி என் உள்ளத்தைத் தொட்டுவிட்டது. அதன் காரணமாக யான் சில கருத்துக்களையேனும் வெளியிட வேண்டிய நிலையில் உள்ளேன்.

நாவலர் காவிய பாடசாலையில் உண்டியும் உறையுளும் பெற்று வளர்ந்தவன், வாழ்ந்தவன் என்ற பாக்கியத்தினால் நாவலர் சிலை திறப்பு விழாவை ஒட்டிய பெருவிழாவைத் தொடக்கிவைக்கும் ஒரு சந்தர்ப்பம் 1969 யூன் 26 இல் எனக்குக் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதினேன்.

குறித்த விழாவின் தொடக்க உரையில் "நம்மிடம் சிறிதே தவம் இருந்ததனாற் போலும் நாவலர் பெருமானின் ஆத்மசக்தி நமக்கிரங்கி நமக்கு வழிகாட்டும் பொருட்டு, நம் முன்னிலையில் உதயஞ் செய்கிறது. உயர்ந்த இராஜோபசாரங்களுடன் இலங்கைத் தலைநகரிலிருந்து புறப்பட்டு வீதிகள் தோறும் திருவுலாச் செய்து, புஷ்பாஞ்சலிகளும் புகழ்மாலைகளும் பெற்று இங்கே எழுந்தருளியிருக்கிறது. தமிழரசர்கள் அரசுபுரிந்த யாழ்ப்பாணத்தில் எழுந்தருளியிருக்கிறது. தமிழரசர்களின் இராஜதனியாய் விளங்கியதும் நாவலர் பெருமான் அவதரித்ததும் தமிழ்முருகு அரசு வீற்றிருப்பதுமான நல்லூரை நோக்கி எழுந்தருளியிருக்கின்றது.

நல்லைக் கந்தன் திருவீதியிலே ஆறுமுகப்பெருமானின் திருக்கோயில் நோக்கியவாறே அப்பெருமானை அஞ்சலி செய்து கொண்டே நல்லை நகர் ஆறுமுக நாவலர் பெருமான் அமர்ந்திருப்பார்.

வேலும் மயிலுந் துணை என்கின்ற அருமந்த வாக்கியத்தைக் கந்தபுராணம் முற்றுப் பெறுகின்ற இடத்தில் அமைத்து, கந்தபுராணத்தையும் கச்சியப்பப் பெருமானையும் உச்சிமேல் வைத்துப்பூசிக்கச்செய்த நாவலர் பெருமான் அழகுக்கு அழகுசெய்யும் கலைப் பொக்கிஷமான மணி மண்டபத்தில் நமக்கு என்றும் வழிகாட்டியாய் நம் நோக்கங்கள் முளை கொண்டு வளர அபயம் அளித்து அமர்ந்திருப்பார்." – என்று குறிப்பிட்டிருந்தேன்.

நாவலர் பெருமான் நல்லூர்க் கந்தசாமி கோயில் அமைப்பையும் சில நடைமுறைகளையும் எதிர்த்தவரேயன்றி (ஆறுமுநாவலர் பிரபந்தத்திரட்டு, நல்லூர்க் கந்தசாமி கோயில்) நல்லூர்க் கந்தசுவாமியரை எதிர்த்தவரல்லர். கோயிலாரை வேண்டுமென்றே எதிர்த்தவருமல்லர்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் சிலை உருவில், மணிமண்டபத்தில் வீற்றிருந்த நாவலர் பெருமான் நல்லூர் பற்றித் தாம் முன்னர் கூறிய திருத்தங்களை மீண்டும் மீண்டும் அதேயிடத்திலிருந்து சொல்லிக் கொண்டு இருப்பாரேயானால் நாவலர் பெருமான் கூறிய திருத்தங்கள் காலகதியிலேனும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் மேற்கொள்ளப்படலாம் என்பதே எனது கருத்தாகும்.

# சிலையை மீண்டும் நிறுவ ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றம் உதயம்

சிலை கடத்தல் மூலம் நாவலர் பெருமான் புகழுக்கு இழைக்கப்பட்டிருக்கும் ஊறுகளை நீக்கவும் சிலையை மீண்டும் நாவலருக்கு உரிமையான காணியில் – அதே இடத்தில் – நிறுவ மக்கள் சக்தியை அணிதிரட்டவும் நாவலர் கருதிய பணிகளைத் தொடரவும் பணிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. மன்றத்தலைவர் பண்டிதர், கலைமாணி மு. கந்தையா அவர்களும் செயலர் சைவப் புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்களும் வெளியிட்டுள்ள அறிக்கை இங்கே தரப்படுகிறது.

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

நாவலர் சிலையே மீண்டும் வருக வருக

## சிலையை மீண்டும் நிறுவ...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணி மன்றத்தினரால் 14-10-85 திங்கட்கிழமை வண்ணார்பண்ணையில் பண்டிதர் மு. கந்தையா தலைமையில் கூடிய கூட்டத்திற்கு யாழ்ப்பாணத்துப் பல சைவ தாபனங்களைச் சேர்ந்தோரும் சைவ அறிஞர் பெருமக்கள் பலரும் வரவு தந்திருந்தனர்.

கூட்டத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபச் சிலை நகர்த்தியமை பற்றிய கலந்துரையாடல் இடம் பெற்றது இச்கலந்துரையாடலில் நல்லூர்த் தெற்கு வீதியில் நாவலர் மணி மண்டபமும். நாவலர் சிலையும் அமையவேண்டி இருந்த இன்றியமையாமை பற்றிய உண்மை விபரங்கள் தெரியவந்தன.

நாவலர் எழுத்துப்படி அவர் மேற்கொண்ட, மேற்கொள்ளவிருந்த கைங்கரியங்களுக்குரிய இடமாக நல்லூர் தெற்கு வீதி நிலம் குறிக்கப்பட்டிருந்த படியினாற்றான் பல பெரியார் திருக்குறிப்புப்படி நாவலர் மணிமண்டபமும், அவர் திருச்சிலையும் இவ்விடத்தில் எடுக்க அந்நாளில் முடிவு செய்யப்பட்டதென்றும் நாவலர் சபையின் அந்நாட் செயலாளராக இருந்த திரு. ம ஸ்ரீகாந்தா அவர்களுக்கு, இச்சபையின் ஆரம்ப கர்த்தாவாகவும் – மிக்க உந்து சக்தியுடையவராகவும் இருந்து அண்மையில் சிவபதமடைந்த திரு க. இளைய தம்பி மூலம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களினால் எழுதப்பட்ட கடிதமும், பேராசிரியர்களாகிய திருவாளர்கள் அ. சின்னத்தம்பி, மயில்வாகனம் போன்ற பல பெருங் கல்விமான்கள் தெரிவித்த கருத்துக்களும் மிகப் பொருத்தமாக இருந்தபடியினாற்றான் இவர்களின் இக்கருத்துக்களை ஏற்று அவற்றின்படி கட்டப்பட்ட மணிமண்டபத்தில் தாடனஞ் செய்ய வடிக்கப்பட்ட சிலையே இதுவாகும் என்றும் இது தவிரப் புதிதாகக்கட்டப்பட்ட இன்றைய நாவலர் கலாசாரமண்டபத்தில் எழுந்தருளச் செய்வதற்கென்று கூறிப் பொருள் சேர்த்துச் செய்யப்பட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது,

மேலும், இக்கூட்டத்தில் கீழ்க் காணும் தீர்மானங்களும் செய்யப்பட்டன:

1. நல்லூர் முருகன் சந்நிதிக்குச் செல்வோர்க்கு அங்கு கிடைக்காத திருவருட் பிரசாதமாகிய திருநீற்றைச் செழிக்க எடுத்துப் பூசிப் பல்லாண்டு காலம் போற்றி வழிபாடாற்றி வந்த நாவலர் பெருமானது திருச்சிலையை பொதுமக்கள் அபிப்பிராயத்துக்கு மாறாகத் தகாத முறையில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்திலிருந்தும் நகர்த்தியோர்க்கு எமது எதிர்ப்பைத் தெரிவித்து திருப்பி எடுத்த இடத்திற்கு கொண்டு வந்து அதனைத் தபானஞ் செய்து வைக்கும்படி கேட்டல்.

# ஐந்தாங் குரவர் சிலையை அகற்றியது தவறு

## துர்க்காதுரந்தரி கண்டனம்; பதவி விலகல்

"இலங்கையில் உள்ள சைவத்தமிழ்ப் பெருங்குடி மக்களது நிதி உதவியினால் உருவாக்கப்பட்ட ஐந்தாம் குரவரது திரு உருவச்சிலை இந்நாட்டிலும் தமிழகத்திலும் உள்ள சமயப் பெரியார்களின் முன்னிலையில் இலட்சோப லட்சம் மக்கள் பிரார்த்திக்க 1969 ஆம் ஆண்டில் யூன் மாதம் 29ஆம் திகதி நல்லூரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தலைநகரிலிருந்து பெரு வாழ்த்து, வணக்க விழாவுடன் ஆறுநாள் திரு உலாவாக யாழ் நகருக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. இப்புனிதச் சிலையை அகற்றியது மாபெரும் தவறாகும்"

இவ்வாறு நாவலர்சபைத் துணைத்தலைவர்களுள் ஒருவரும் தெல்லிப்பழை திருமிகு துர்க்காதேவி ஆலய அறங்காவற்குழுத் தலைவருமாகிய துர்க்கா துரந்தரி பண்டிதர் தங்கம்மா அப்பாக்குட்டி நாவலர் சபையின் தான்தோன்றித் தனமான முடிவுகளையும் செயல்களையும் கண்டித்து எழுதிய பதவி விலகற் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2. இது தொடர்பான ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந் நாட்டிலுள்ள ஏனைய மற்றுஞ் சைவ தாபனங்களையும், சைவப்பெரியோரையும் ஒருங்கிணைந்த சம்மேளனம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுத்தல்.

3. நாவலர் மணிமண்டபத்திற்கும் சிலைஎடுப்பதற்கும் பொதுமக்களிடம் சென்று நிதிதிரட்டியதோடு, பொது மக்கள் தொடர்பை நாவலர் சபையார் துண்டித்திருப்பதற்குக் கண்டனம் தெரிவிப்பதுடன் பொதுமக்கள் அபிப்பிராயத்தைப் பெறுவதற்கும் பொதுச்சபைக் கூட்டம் ஒன்றை விரைவில் யாழ்ப்பாணத்தில் கூட்டும்படி நாவலர் சபைக்கு வேண்டுகோளொன்று விடுத்தல்.

4. அரச உடமைச் சொத்தாக இன்றிருக்கும் நல்லூர் நாவலர் வீதியிலுள்ள நாவலர் இந்து கலாசார நிலையத்தை நாவலரையும் அவர்தம் கோட்பாடுகளையும் நன்கறிந்த – அவர்மீது பற்றுக்கோடுள்ள ஒரு சைவத் தாபனத்திடம் கையளிக்கச் செய்தலும் அதன் கர்த்தாவாக விளங்கிய பெருந் தொண்டர் திரு. க. இளையதம்பியின் ஆரம்ப நோக்கமாகிய நாவலர் ஐந்தாண்டுத் திட்ட வேலைகளை இந்நிலையமூலம் நெறிப்படுத்திச் செயற்படுத்தி வைத்தல் முதலியனவாகும்.

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழைப்பாரற்ற இடத்திற்கு அநாதரவாகச் சென்ற சிலை

## மீட்பது மக்கள் கடமை

அ. நல்லதம்பி,
உரும்பராய்

நல்லை நகர் நாவலர் திருஉருவச்சிலை நல்லைக் கந்தன் தென்புற வீதிக்குப் புறத்திருந்த மணிமண்டபத்திலிருந்து திருட்டுத்தனமாகப் பிடுங்கப்பட்டுப் பிறிதோரிடத்துப் பதுக்கப் பட்டமை சைவத் தமிழ்மக்களைப் பெரும் வேதனைக்குள் அமிழ்த்தியுள்ளது.

நாவலர் சிலையின் எதிர்காலம் பற்றிய அபிப்பிராயம் சேகரிக்கும் நோக்காகக் கடந்த ஆடி மாதத்தில் நாவலர் மணி மண்டபத்தின் முன்வெளியில் ஓர் கூட்டம் நடைபெற்றது. நாவலர் சபையின் இணைச்செயலாளருள் ஒருவரான பெரியார் திரு. கா. விசுவலிங்கம் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அறிஞர் சொக்கன் உட்படப் பல அறிஞமேதைகள் நாவலர் பெருமானின் திருச்சிலை அமைவுற்ற இடத்திலிருந்து பெயர்வுற்றதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். நாவலர் சிலை எக் காரணங்கொண்டும் உற்ற இடத்திலிருந்து அகற்றலாகாது என்னுந் தீர்மானம் ஒன்றை அன்றே நிறைவேற்ற அங்கு குழுமியிருந்தோர் முனைந்தனர்.

அவ்விடத்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படுவதைக் கூட்ட அமைப்பாளர் விரும்பாது "இது ஓர் அபிப்பிராயங் கோரி எடுக்கப்பட்ட கூட்டமாதலின் உங்கள் அபிப்பிராயஞ் செவிமடுக்கப்பட்டது; தீர்மானம் அவசியமன்று" எனக் கூறினார்.

பின்னொருநாள் மணிமண்டபத்து நாவலர் சிலை காணப்படவில்லை 'குடம்பை தனித்தொழியப் புட்பறந்தாங்கு' என்றவாறு உயிரற்ற வெறும் மண்டபத்தைக் காணமுடிந்தது. நீறுற்ற திருமேனியாற் சிறுவன் முதல் முதியோர்வரை எல்லோரது அகத்திருளையும் போக்கிப் பல்லக விளக்காகப் பலருங் காண நிலைத்திருந்த நல்லக விளக்கு நல்லைத் திருவிளக்கு அங்கு உற்றவிடத்து உருதிருந்தது பெற்றியோர் மனத்துப் பேரிருளைக் கொட்டியது.

இந்து சமய விவகாரப் பணிப்பாளரின் பத்திரிகை அறிக்கை ஒன்றின் மூலம் நாவலர் திருச்சிலை அழைப்பாரற்ற இடமொன்றிற்கு அனுமதியின்றி அநாதரவாகப் புகுத்தப்பட்டதாக அறிய முடிகின்றது. பகிரங்க அறிவித்தலுடன் பலரும் போற்றிசெய்ய நல்லைநகர் நாமம் வாழி என நாற்றிசையும் இசை ஒலிப்ப இடமாற்றக் கைங்கரியம் நிறைவுறவில்லை. இதனால் இக்காரியம் நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றிச் செய்யப்பட்ட வஞ்சனைச் செயல் எனக் கருதல் கண்ணியமற்ற எண்ணமாகாது.

"மோதி மிதித்துவிடு பாப்பா முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா" என்று பாரதியார் கூறியவாறோ அன்றிக் "கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே" எனப் பாரதிதாசன் கூறியவாறோ கூறாமல், பழம் பெருஞ் சைவ நிறுவனமான விவேகானந்த சபையார் தங்கள் தீர்மானத்தால் "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாருஞ் சேருவீர்" என்ற பண்பில் அழைத்தமையைச் சைவ நிறுவனங்கள் யாவும் ஏற்றுச் செயலாற்றும் என நம்பவேண்டும்.

ஒன்றாய் முளைத்தெழுந்த போதும் பற்பல தவறுகள் தோற்றுதல் அவ்வித்தகத்தின் பெருஞ் சக்தியைப் பிரதிபலிப்பதாகும். நாவலர் நெறியைப் போற்றியும் பேணியும் பெரும்பணியாற்றும் விவேகானந்த சபையின் கவடுகளுள் நாவலர் சபையும் இந்துமாமன்றமும் கருத்தமைந்த காரணங்கொண்டு ஆக்கமுற்ற குருத்துக்கள்; இருளுட்புகாது ஒளியைநாடி நாவலர் சபை விருத்திபெற வேண்டும் என வளாரினால் அடிப்பதுபோன்ற நன்னோக்கும் அருளும் விவேகானந்த சபையாரின் தீர்மானத்து அமைவதாகக் காணக்கிடக்கின்றது.

பலகிளைகள் சிற்றாறுகளாய் உற்பத்தியாகி இணைந்து பேராறாய் ஆழி இறைவனை அணுகுமாறு பல சைவ நிறுவனங்களின் கூட்டியமாய் அகில இலங்கை இந்து மாமன்றம் அமைவதால் வெறும் தீர்மானத்துடன் நின்றுவிடாது அகில இலங்கை இந்து மாமன்றத்தைக் கூட்டி விவேகானந்த சபை ஆவன புரியாது ஒழிபின் அவர்களின் தீர்மானம் அவர்களை வெறும் "வாய்ச் சொல்லில் வீரர்களாகவே" ஆக்கிவிடும்,

நாவலரின் செம்மை நலம் அறியாத சிறியவர்களின் புன்னெறிப் போக்கினை நீக்கவேண்டும். நாவலர் சிலையை முன்னைய இடத்தில் திரும்பவும் திரு அமர்வு செய்யப் பெருங்கருணைப் பேராறாய் மாசு நீங்கி மகத்துவமுற இணைந்து குற்றங்களைந்து குணமேற்கொண்டு சைவப் பெருமக்கள் செயலுறத் தங்கள் நாளிதழின் பணியும் சமய நிறுவனங்களின் பணியும் பெரிதும் வேண்டப்படுகின்றது.

நன்றி : வீரகேசரி

---

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1969 இல் தோற்றவர்கள் 1985 இல் வென்றனர்?

பேராசிரியர் பொ. பூலோகசிங்கம்

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் 17 - 6 - 1968 இலே இலங்கை நடைமுறைத் தமிழ் இயக்கத்தினர் நடத்திய கூட்டத்திலே கொழும்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கொழும்பு ஆறுமுகநாவலர் சபை யாழ்ப்பாணத்தில் நல்லூரில் 1969 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆம் திகதி நாவலரவர்களின் சிலையை நிறுவியது.

பண்டிதமணியவர்கள் முதலானோர் நாவலர் பெருமான் சிலா ரூபம் பவனியிலே தெற்கிலிருந்து வடக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்ட போது பெரு மகிழ்வு எய்தினர். ''கடவுள் உண்டு சிலை பவனி வருகிறது'' என்று பண்டிதமணி அவர்கள் அன்று எழுதி மகிழ்ந்தார்.

நாவலர் பெருமானின் படிமம் நல்லூர்க் கந்த சுவாமி கோயில் தெற்கு வீதியிலே அன்று நிறுவப்பட்டது. பண்டிதமணி அவர்களோடு சைவ உலகும் அன்று பெரு மகிழ்ச்சியடைந்தது. இதனைக் கண்டு கொழும்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையும் அன்று இறும்பூதடைந்தது.

இன்று நல்லூர்க் கந்தன் தெற்கு வீதியிலே நாவலர் பெருமான் படிமம் இல்லை. கொழும்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் பொறுப்பிலேதான் நாவலர் சிலையும் மணிமண்டபமும் நல்லைக் கந்தன் தெற்கு வீதியிலே நிலைபெற்றிருந்தன.

ஆறுமுகநாவலர் சமய குரவர் நிலையைத் தாண்டி, தமிழறிஞர் நிலையைத் தாண்டி, தேசியத் தலைவர்களில் முக்கியமானவராகப் போற்றப்படும் நிலையில் உள்ளவர்.

அத்தகைய பெருமை மிக்கவருக்கு மக்கள் மனமுவந்து அளித்திருந்த புனித இடத்திலிருந்து அவரை அப்புறப்படுத்திவிட்டார்கள்.

பொது சனங்களுக்குரிய தெற்கு வீதியிலிருந்து தமிழினத்தைப் பெருமைப்படுத்திக் கொண்டிருந்தவரை அப்புறப்படுத்தி விட்டார்கள்.

இன்றைய சந்ததியினர் தரிசித்து அவர்தம் பெருமையைச் சிந்தித்துத் தம் நல்வாழ்க்கைக்கு வழி அமைத்துக் கொள்ளக்கூடிய இடத்திலே அமர்ந்திருந்தவரை அப்புறப்படுத்தி அந்தகாரத்துள் தள்ளிவிட்டார்கள்

1969 இலே நாவலர் பெருமான் திருவுருவத்தைத் தெற்கு வீதியிலே எழுந்தருளாது தடுக்க முடியாதவர்கள் 1985 இலே வென்று விட்டார்கள், அவர்கள் வெற்றிக்கு யார் உடந்தை?

அவர்கள் 1969 இலேயே உடந்தையாக இருந்திருந்தால் தமிழினத்தை மாபெரும் துரோகிகளாக ஆக்கியிருக்க மாட்டார்களே.

''எனக்குப் பின் சைவ சமயம் குன்றிப் போகுமென்று பாதிரிமார்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் நான் உயிரோடு இருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள்— உங்களுடைய வைவுகளைக் கேட்டுக்கேட்டு கைம்மாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப் போல ஒரு வரும் வரார்'' — என்பன நாவலரவர்கள் ஆற்றிய இறுதிப் பிரசங்கத்தின் முடிவுரை வார்த்தைகள்.

இன்றைய செயலை நாவலரவர்களின் இறுதி வார்த்தைகளோடு இணைத்துப் பார்க்கும் போது தமிழினம் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

நன்றி: வீரகேசரி

---

### 20 ஆம் நூற்றுண்டின் மாபெரும் துரோகச் செயல்

# சிலை கடத்தல்

இரா. வை. கனகரத்தினம் எம். ஏ.
விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக் கழகம்

இறைவன் மெய்யடியாரிடத்து இறங்கி நேரடியாக வந்தும் மற்றும் பல நிலையிலும் அருள் பாலிப்பவர். இவ்வுண்மையைச் சைவத்திரு நூல்கள் யாவும் புலப்படுத்தி நிற்கின்றன. இறை பணியே தம் பணி என்றும், கந்தன் கழல் அடைவது தமது இறையியல் வாழ்வென்றும் வாழ்ந்த நாவலர் பெருமானுடைய திருவுருவத்தை சுவாமி சுற்றக் கூடாதெனக் கூறிய பெருமகனின் சமய ஞானத்தின் பேராற்றலைப் போற்ருமல் யாரால் இருக்க முடியும்?

இச் சமய ஞானியின் அறிவுரைக் குட்பட்ட யாழ். மாநகர சபையாரின்; குறிப்பாக ஆறுமுக நாவலர் சபையாரின் சமய பக்தியையும், சமயப் பாதுகாப்பையும் எவ்வாறு புகழ்வது?

சைவத் தமிழ் அறிஞர்களும் சமயப் பெரியோர்களும் நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை அகற்றலைப் பற்றிப் பலவாறு கண்டித்தும், அதன் தாற்பரியத்தை எடுத்துக் கூறிய பின்பும் செவிடன் காதில் ஊதிய சங்கு போல் இருப்போரின் பெருங்குணத்தை எவ்வாறு போற்றுவது? (தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலர் சிலை பெயர்க்கப்பட்டது அடுக்காத செயல்

சி. தில்லைநாதன்
தமிழ்த்துறைத் தலைவர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இருந்து ஆறுமுக நாவலர் உருவச் சிலை அகற்றப்பட்டது விரும்பத்தகாத செயலாகும். இந்த நாட்டுத் தமிழ் வரலாற்றிலும் சைவ வரலாற்றிலும் பிரதான இடம் வகிப்பவர் ஆறுமுகநாவலர்.

பறைகொட்டி ஊரையெல்லாம் கூட்டிப் பாந்த அளவிலான பொது மக்கள் ஆதரவோடு இந்நாட்டில் நாவலருக்கு எடுக்கப்பட்ட சிலை திடீரெனப் பெயர்க்கப்பட்டுள்ளது.

அதற்கென முறைப்படி வழங்கப்பட்ட நிலத்தில் நாட்பார்த்து, சகுனம் பார்த்து நிறுவப்பட்டுப் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக விளங்கிய சிலை ஊருக்குத் தெரியாமல் அகற்றப்பட்டுள்ளது.

தமிழ்ப் பண்பாட்டையும் சைவத்தையும் நாவலரையும் நன்கறிந்த பலர் இச் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவிதுள்ளனர்.

நல்லூர்க் கோயிலின் சூழல் அமைப்பு மாறிவிட்டதென்றும் பொருத்தமான இடத்திற்குச் சிலை மாற்றப்பட்டுளளதென்றும் கூறுவது சாட்டாகவும் சமாதானமாகவும் சிலருக்குத் தோன்றினாலும் உடன்படத்தக்க நியாயமாகப் படவில்லை. இன்று அச்சிலை வைக்கப்பட்டுள்ள ஆறுமுகநாவலர் கலாசார நிலையம் நாவலர் சபையின் பரிபாலனத்தில் உள்ளதா? அல்லது அக்கலாசார நிலையத்தை நிறுவியவர்கள் நாவலர் சிலை ஒன்று எங்காவது இருந்தால் பெயர்த்துகொண்டு வந்து தாருங்கள் என்று நாவலர் சபைக்கு வேண்டுகோள் விடுத்தார்களா? அல்லது நாவலர் சிலையினை நிறுத்துவதற்கு வேறு இடமொன்றினை நாவலர் சபையினர் தேட நேர்ந்த இடத்து கலாசார நிலையத்திற்கு எடுத்து வாருங்கள் என்றார்களா? என்பதும் விளங்கவில்லை.

சிலை நிறுவப்பட்டதாற்றான் நாவலருக்குச் சிறப்பு உண்டாயிற்று என்று கருதுவதற்கில்லை. சிலையெடுத்த மக்கள் தங்கள் தமிழ் ஆர்வத்தையும் சைவப்பற்றையும் காட்டிக் கொண்டதோடு பண்பாட்டைப் பேணி வளர்க்கும் ஆர்வத்திற்கும் உரமிட்டுக் கொண்டனர் என்பதே பொருந்தும்.

நாவலர் சபைக்கு என்ன நடக்கிறது என்று யாம் அறிவோம். ஆனால் தமிழும் சைவமும் உள்ள வரை நாவலர் நாமம் நிலைத்திருக்கும் என்பதை உணராத எவராவது அச்சபையில் இருப்பாராயின் அது வருத்தத்திற்குரியதாகும். நாலலர் சிலையினைப் பெயர்த்த கைங்கரியம் இன்றுடனே நாளையுடனே மறந்து விடப்படப் போவதில்லை. எதிர் காலத்திலும் அதற்குக் காரணமானவர்களைப் பற்றிய விசாரம் தொடரும்.

நாவலர் சிலை நல்லூரில் அது இருந்த இடத்தினின்று நீக்கப்பட்டதும் அது செய்யப்பட்ட விதமும் நாவலருக்கு எந்தவகையாலும் இழுக்கு ஏற்படுத்திவிடா. ஆனால், தமிழையும் சைவத்தையும் வளர்த்த இடம் யாழ்ப்பாணம் என்ற பெயருக்கும், ஏனையோர் கருத்துக்கு மதிப்பளிக்கும் நாகரிகத்திற்கும் மாறாக களங்கம் விளைவிக்கப்பட்டிருக்கிறது. அது வெட்கத்திற்குரியது; கண்டிக்கப்படத்தக்கது.

நன்றி ; வீரகேசரி

## 20 ஆம் நூற்றாண்டின் . . . .

( 5 ஆம் பக்கத் தொடர்ச்சி )

(நாவலர்சபை) மூவரின் புறவாழ்வின் அபிலாசைகளின் உச்சக் கட்டமாகவே நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை அகற்றல் வேலை மேற்கொள்ளப்பட்டதென மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இஃது சமய உட்பகையான ஒரு தீவிரச் செயலென்றே சமய மக்கள் நம்புவதில் எந்தத் தப்பும் இல்லை.

இந்நூற்றாண்டிலே சைவ உலகிற்கு இழைக்கப்பெற்ற பெருந் துரோகமான செயலென்றே கூறுதல் வேண்டும். இப் பிரச்சனைக்கு விரைவில் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே சைவர்களின் அபிலாசை.

நன்றி: வீரகேசரி

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் திருவீதியில் நாவலர் பெருமான் சிலையுருவில் வீற்றிருக்க வந்ததேன்?

பண்டிதர் மு. கந்தையா, பீ. ஏ.
தலைவர்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றம்

தில்லையிலே நல்லை நாவலர் சிலையைச் சுற்றி நடராஜப்பெருமான் வலம் வருகிறார். நல்லையில் மட்டும் அது எப்படிக் குற்றமாகும்? சிலையை மீண்டும் அதே இடத்தில் தொடர்ந்திருக்க வைப்பது சைவமக்கள் தலைக்கடனாகும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்குத் திருவுருவச் சிலை உருவானதன் சார்பாக, சிலை நிறுவுவதெங்கே? என்ற பிரச்சினை உருவானதும் பிரசித்தம். அது பற்றிய ஆலோசனைகள் கருத்துப் பரிமாறல்கள் அபிப்பிராய வெளியீடுகள் பரவலாக இடம்பெற்றன. பல துறைகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

## சிலை எங்கே?

## கருத்துக்களும் முடிவும்

'யாழ். நூல் நிலைய முன்றிலில் தமிழ் வருடப் பிறப்புத் தினத்தன்று நாவலர் சிலையைத் திறந்து வைக்க மந்திரி திருச்செல்வம் நடவடிக்கை' — என்ற செய்தி 18-1-68 ஈழநாட்டில் கொட்டை எழுத்திற் பிரசுரமானது. ஆனால் அது செய்தியளவிலேயே நின்று வற்றிற்று.

பின், பேராசிரியர் டாக்டர் சின்னத்தம்பி அவர்களைத் தினகரன் நிருபர் பேட்டி கண்டு வெளியிட்ட செய்தியொன்று 24-6-68 தினகரனில் வெளியானது. திருக்கேதீச்சரத்து இராஜ கோபுரத்துக்கு முன் நாவலர் சிலை நிறுவப்பட எடுக்கப்பட்ட முயற்சியைப் பேராசிரியர் ஆமோதித்திருப்பதாகச் சாங்கோபாங்கமான விளக்கங்களுடன் கூடிய விரிவான தகவல் அதன் மூலங் கிடைத்தது. அதுவும் தகவலளவிலேயே தக்கிப் போயிற்று.

கொழும்பில் நிறுவலாம், கீரிமலையில் நிறுவலாம், யாழ் சைவ பரிபாலன சபையில் நிறுவலாம் என மற்றும் பல வதந்திகளும் அடிபட்டன.

## பண்டிதமணி கருத்து ஏற்கப்பட்டது

மேல், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், நாவலர் சிலை நல்லூரில்தான் நிறுவப்படவேண்டும் என அன்றைய நாவலர் சபைக் காரியதரிசி திரு. சிறீகாந்தாவுக்குக் கடிதமூலந் தெரிவித்திருக்கின்றார். இச் செய்தி, நாவலர் சபைப் பணிகளின் முன்னணித் தொண்டராய் விளங்கிய அமரர் திரு. க. இளையதம்பியின் 4-8-68 தேதிய தினக் குறிப்பிற் கண்டுள்ளது.

இவ் விபரமெல்லாம் ஏன்? குறித்த முயல்வுகளில் மற்றெதற்கும் உட்பட்டு விடாமல் நாவலர்சிலை நல்லூர் வீதிக்கே வந்துவிட்டதன் பிரத்தியேகத் தன்மையை நாம் உற்றுணரத் தூண்டுவதற்காக.

## தார்மிகக் காரணம்

நிகழுஞ் செயல்கள் ஒவ்வொன்றுக்கும் சம்பந்தப்பட்ட சிலர் பலர் அபிப்பிராயந்தான் முழுக்காரணமும் எனக் கொள்ளும் போக்குச் சாதாரணமானது. ஆனால், சம்பந்தப்பட்டவர்கள் முன்னிலைக் காரணமளவில் இருக்க, அவர்களை அவ் வகையிற் செலுத்தும் பின்னிலைக் காரணமும் ஒன்றிருத்தல் தவிர்க்க முடியாதாகும். இது சமய ஞானம் வற்புறுத்துஞ் செய்தி. எங்கள் நடைமுறை அனுபவங்களின் சார்பிலும் உய்த்துணரக் கிடப்பது, முன்னிலைக் காரணம போல நேரடியாகத் தோன்றாமல் தான் தலை மறைவாக இருக்கும் இக் காரணம் தார்மிக காரணம் எனப்படும். குறித்த விஷயத்தில் இத் தார்மிக காரணம் இருந்தவாறு சிந்திக்கத் தகும்,

## நாவலரும் முருகனும்

சிவபெருமானே பரமபதியென்பது நாவலர் உதிரத்தில் ஊறிய உணர்வழுத்தம். அதே வேளை தாம் காதலித்தோதும் கந்தபுராணத்திற் பிரதிபாதிக்கப்பட்டவாறு கந்தசுவாமியும் சிவனே என்பது அவர் கொள்கை. 'பதியிலக்கணங்களிற் சிறிதுங் குறைவில்லாத சுப்பிரமணியக்கடவுள்' என அவர் ஓரிடத்திற் குறிப்பிட்டிருத்தல் கண்கூடு, அதற்கிணங்க நல்லூர்க் கந்தசுவாமியாரிடத்தில் அவருக்குச் சிறந்த ஈடுபாடுண்டு. நாவலர் ஜன்மபதி நல்லூர், நல்லார் அதிஷ்டான தெய்வம் கந்தசுவாமியார். அவ்வகையில் கந்தசுவாமியார் அவர்க்குக் குலதெய்வமுமாவர். நாவலர் வாக்கிலேயே அது வெளிப்பட்டுள்ளது. 'இந்தியாவிலோ பெரும்பான்மையோருக்குக் குலதெய்வம் காடன், மாடன், கறுப்பன், வீரன் முதலிய பிசாசுகள், இத்தேசத்திலோ பெரும்பான்மையோருக்கு எல்லா அறிவும் எல்லா முதன்மையும் எல்லா அநுக்கிரகமுமுடைய நமது சுப்பிரமணியக் கடவுளே குலதெய்வம்' இதில், நமது என்ற அடைமொழி குறிப்பதென்ன? தன்னையாட்கொண்ட தமது சந்ததிமுழுவதுக்கும் அவர் குலதெய்வம். என்பதே. இவருக்குப் பெயர் ஆறுமுகம். இவர் தந்தைக்குப் பெயர் கந்தப்பிள்ளை. இரு பெயருஞ் சந்தசுவாமியார் பெயர்களே.

இந்த நாவலரின் இலக்கிய வெளியீடுகளில், திருமுருகாற்றுப்படை திருச்செந்தில் நிரோஷ்ட யமகவந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, அருணகிரிநாதர்

நாவலர் சிலையே மீண்டும் வருக, வருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருப்புகழ்வகுப்பு, திருச்செந்தூரகவல், கந்தபுராணம் என்ற ஏழும் அரியவும் பெரியவுமான கந்த சுவாமியார் பிரபாவ நூலகள். திருமுருகாற்றுப்படைக்கு அவர் எழுதிய விளக்கவுரையின் விசேடங்கள் கந்த சுவாமியார் அவரறிவிற் பிரசன்னமாயிருந்த அற்புதத்தை அறிவிக்கும். கந்தபுராணத்தைப் "பதிவாக்கியம்" என விளக்கினவர் அவர்போல் மற்றெவருமிலர். சந்தபுராணத்தை அவர் போற் செப்பமாகப் பதிப்பித்தோரும் வேறியாருமிலர். கந்தபுராணப் பதிப்பில் அவர் சேர்த்துள்ள உபோற்காதம் அவரது தனிப்படைப்பு. சர்வஜன ரஞ்சகமான முறையில் கந்த புராணத்தைப் பத்திஞானப் பரிமளிப்புடன் படனஞ் செய்து காட்டியோரும் அவரன்றி மற்றுருமிலர்.

### நல்லூர்க் கோவிலும் நாவலரும்

இனி, யாழ்ப்பாணக் கோயில்களில் மற்றெக் கோயிலிலுங்கொள்ளாத அளவு நல்லூர்க் கோயிலில் நாவலர் கரிசனை கொண்டதேன்? கோயில் அமைப்பையும் நிர்வாகத்தையும் திருத்த மூர்த்தண்யமாய் நின்றதேன்? தம் ஆலோசனையை ஏற்காதபோது நிர்வாகத்துக் கெதிராகப் பலத்த கண்டனக் குரல் எழுப்பியதேன்? கோயில் வீதியிலேயே காணிவாங்கிச் சைவப்பிரகாச மடம் ஒன்றமைக்க அவர் முயன்றதேன்? திருவாவடுதுறை ஓதுவார்களை அழைத்து அக்காணியிலே தங்கவைத்து மகேசுரபூசை நடத்தி அவர்களைக் கொண்டு திருவிழாவில் திருமுறைப் பஜனை நிகழ்த்துவித்ததேன்? கோயில் மண்டபத்தில் தாமிருந்து கந்தபுராண படனமும் சுப்பிரமணியபிரபாவம் பற்றிப் பிரசங்கமும் பண்ணியதேன்? இவ்வெல்லாவற்றுக்கும் ஒரேயடியான பதில், நல்லூர்க்கந்தசுவாமியாரோடு நாவலர்க்கிருந்த ஆத்மீக உறவின் அத்யந்த செறிவு அத்தகையது என்பதுதான். வேறெங்கும் நாடாமல் நல்லூர்வீதியில் அவர் சிலையுருவில் வீற்றிருக்க வந்ததற்கான தார்மீக காரணம் அதுவேயாம்.

### நாவலர் – காவலர் முரண்பாடு

நல்லூர்க் கந்தனும் ஆறுமுகநாவலரும். (8-10-71 தினகரன்) என்ற கட்டுரையில் அமரர் இளையதம்பி வரைந்துள்ள பின்வரும் பந்தியில இக்கருத்துச் சூசிக்கப்பட்டிருக்கும் விதம் சுவாரசியமானது:

"நாவலர் பெருமானின் அறிவுரையைச் சிரமேற் கொண்டு நின்ற கோயில் முதலாளியின் தருமத்தைப்புரிந்து கொள்ளாத போலிகள் சிலர் தமது வருவாய்க்கு வந்த தாக்கத்தை யெண்ணிச் சினந்து நாவலரையும் முதலாளியையும் ஒன்றுபடவிடாமற் பிரித்தற் கேற்ற சூழ்ச்சிகளைக் கையாண்டு தீவினை வசத்தால் தற்காலிக வெற்றியும் பெற்றனர் ஆனால், ஆறுமுக நாவலரவர்கள் மீண்டும், தாம் முன் இடங்கோலி வைத்த அதே சைவப்பிரகாச மடாலய வளவில் சிலையுருவில் எழுந்தருளி அறிவுரை வழங்குதலை மேற்கொண்டுள்ளார்கள்.

### ஆத்மிக உறவின் செறிவு

கந்தசுவாமியாருக்கும் நாவலர்க்கு மிடையிலிருந்த ஆத்மிக உறவே நாவலர் சிலை கோயில் வீதியில் அமரும் நிலையை வருவித்தது என்ற உண்மையை இப் பந்தி இலாகவமாக எடுத்துணர்த்துகின்றது. அவ்வுறவின் செறிவைப் பிரிக்கும் உரிமை யாருக்குமே இருக்கமுடியாது. அச் செறிவு பற்றி அங்கே இடம் பெற்ற சிலை என்றும் அங்கேதான் இருக்க வைக்கப்படவேண்டும் என்பதை நியாயப்படுத்த இவ்வளவே போதும்.

### சில்லறைச் சாட்டுகள்

குறித்த விஷயத்தில் தற்காலிகமாக எழுந்த தடுமாற்றத்துக்கு அடை கல்லாக அணைக்கப்படுஞ் சில்லறைச் சாட்டுகளும் இதனால் வலுவிழக்கும். நல்லூர் வீதியில் தற்காலிகமாகத்தான் அன்று நாவலர் சிலை நிறுவப்பட்டதென்பது காட்சிவகையாலும் உண்மையாகாது; கருத்துவகையாலும் உண்மையாகாது. பெரியார்கள் பிறந்த இடத்திலதான் சிலை வைக்கவேண்டும் என்ற பின்னைய சாட்டும் நடைமுறை வழக்குக் கொத்ததல்ல. சிலர் விஷயத்திற் பிறந்த இடம் முக்கியத்துவம் பெறலாம். சிலர் விஷயத்தில் அவர் சேவையாற் சிறந்த இடம் முக்கியத்துவம் பெறலாம். சேக்ஸ்பியர் விஷயத்தில் பிறந்த இடம் முக்கியத்துவம் பெற்றது. சேர் இராமநாதன், சேர். அருணாசலம் என்போர் விஷயத்தில் அவர்கள் சேவையாற் சிறந்த பாராளுமன்ற முன்றில் முக்கியத்துவம் பெற்றது.

### சேவையாற் சிறந்த இடத்திலே சிலை

நாவலர் விஷயத்திலும் அவர் சேவையால் மட்டுமன்றி, அவர் ஆத்மீகச் செறிவினாலும் முக்கியத்துவம் பெறுவது நல்லூர்க்கோயிற் சூழலே ஆதல் வெளிப்படை. அங்கெழுந்த மணிமண்டபம் நாவலர் திருக்கோயில். அது இருக்குங்காணி நாவலர்க்கு நிரந்தர ஆட்சியுரிமை பெற்ற காணி. அவர் சிலையுருவிலான பிறகே பதினாறுண்டு ஆட்சிப்பலம் உள்ள இடம் என்பதையும் கவனிக்க வேண்டும்.

### தில்லை வழி காட்டுகிறது

தவறு கண்டபோது காரணங் காட்டி நல்லூர் நிர்வாகத்தை ஏசியதுபோலவே நாவலர் தவறு கண்டபோது தில்லை நடராஜர் கோயில் நிர்வாகத்தையும் ஏசியுள்ளார். அதற்காகச் சிதம்பரம் தெற்கு வீதியில் இருந்த அவர் காவிய பாடசாலை அகற்றப்படவில்லை. அதற்கெதிர் மேற்கு வீதியிலும் 'நாவலர் ஹைஸ்கூல்' எழுந்தோங்கி நிற்கிறது. அங்கு முன் மண்டபத்தில் உள்ள நாவலர் சிலை மேற்குப் பார்த்தபடி மேற்கு வீதியை நோக்கியிருக்கிறது. சிதம்பர தலத்துச் சுவாமிகள் எல்லாம் அவ் வீதியாலேயே திருவுலா எழுந்தருளுகின்றன. நடராஜப் பிரபுவும் அந்த வீதியிலேயே திருத் தேர்ப் பவனி கொள்கின்றார். அது அகில உலக சைவ இராஜதானி.

(தொடர்ச்சி 9 ஆம் பக்கம்)

**நாவலர் சிலையே மீண்டும் வருக, வருக.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாநகர ஆணையாளரின்
# சிலை கடத்தல், சிலை நிறுவல்
## இவை இரண்டும் அத்துமீறிய செயல்கள்.

திருமதி இராசலட்சுமி கைலாசநாதன்
பணிப்பாளர்
இந்து காலாச்சரா அமைச்சு;

நாவலர் பெருமானின் சிலையை அகற்ற ஆணையாளர் "ஒன்பது" பொய்களைக் கூறினர். இந்து கலர்சார அமைச்சின் பணிப்பாளர் திருமதி இராசலட்சுமி கைலாசநாதன் தமது அமைச்சைச் சர்பந்தப்படுத்தி ஆணையாளர் கூறிய தவறான தகவல்களை மறுத்து சிந்தாமணி ஏட்டிற்கு அளித்த செவ்வி இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலும் மற்றும் தமிழ்மக்கள் வாழும் பகுதிகளிலும் பெரு சர்ச்சையைக் கிளப்பியுள்ள நாவலர் சிலை அகற்றப்பட்ட சம்பவத்திற்கும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

பிரதேச அபிவிருத்தி அமைச்சினுல் அமைக்கப்பட்டிருக்கும் ஆறுமுகநாவலர் கலாசார நிலையம் நாவலர் சபையிடமோ அன்றி வேறு ஸ்தாபனங்களிடமோ ஒப்படைக்கப்படவில்லை.

பிரதேச அபிவிருத்தி அமைச்சினுல் அமைக்கப்பட்டிருக்கும் நாவலர் கலாசார நிலையத்தில் இந்துசமய நூல்நிலையம் ஒன்றை அமைக்கவும் நாவலர் பெருமானின் உருவச் சிலையொன்றைப் பிரதிட்டை செய்யவும் அமைச்சு திட்டமிட்டிருக்கிறது.

நகரின் மத்தியிலிருந்து அகற்றப்பட்ட சிலை அமைச்சுக்குத் தெரியமாலும் அனுமதி பெறுமலும் அமைச்சுக்குச் சொந்தமான கட்டிடத்தில் நிறுவப்பட்டிருக்கிறது.

இதனை அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்த அமைச்சர் யாழ் மாநகர ஆணையாளரை அழைத்து சம்பவங்கள் பற்றித் தீவிரமாக விசாரணை நடத்தியுள்ளார்.

அமைச்சின் அனுமதியின்றி நடைபெற்ற இச்சம்பவத்திற்காகத் தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொண்ட ஆணையாளர் இது தொடர்பாக ஏற்பட்ட தவறுகளையும் ஒப்புக் கொண்டுள்ளார்.

வைபவரீதியாக இந்து சமய முறைப்படி விழா எடுத்து நிறுவப்பட்ட நாவலர் சிலை அகற்றப்பட்ட சம்பவம் நடக்குமுன் எமக்குத் தெரிந்திருந்தால் அதனை நிச்சயமாகத் தடுத்திருப்போம் ஆனல் எல்லாம் நடந்து முடிந்த பின்பு தானே எங்களுக்குத் தெரியவந்துள்ளது.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்தான் யாழ்மாநகர ஆணையாளர் மூலமாக இச்சிலையை அகற்றி (அமைச்சின்) புதியகலாசார நிலையத்தில் நிறுவியதாகக் கூறப்படுவது விஷமத்தனமான ஒரு பொய்ப் பிரசாரமாகும். சிலை அகற்றப்பட்ட சம்பவத்திற்கும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிற்க்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### நல்லை தொடரட்டும்

எங்கள் நல்லூரும் ஈழத்துச் சைவ ராஜதானி. அங்கு நிலவும் நடைமுறையைத் தாராளமாக இங்கும் அநுசரிக்கலாம். ஆதலால் சிலையிருப்பது சுவாமி வீதிசுற்றத் தடை என்றவாறு அடிபடும் வதந்திக்கு அர்த்தமேயில்லை. இவற்றைப் பொருள் செய்யாது நாவலர் பெருமான் திருவுருவச்சிலை யதார்த்த ஸ்தானத்து மீண்டு தொடர்ந்திருக்க வைப்பது சைவமக்கள் தலைக்கடனுகும்.

சிலையை உடைத்துக் கடத்திய "கொழும்பு" நாவலர் சபை நாவலர் குருபூசை தினமாகிய இன்று யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தப்போவதாக விளம்பரம் செய்துள்ளது. மாயை மயக்கமும் செய்யும் என்பது சைவசித்தாந்தம். மாயை பெற்ற புதல்வர்களும், புதல்விகளும் நடத்தும் இந்த நாடகங்களில் மயங்க வேண்டாமெனப் பொதுமக்களை நாவலர் குரல் வேண்டுகிறது.

**நாவலர் சிலையே மீண்டும் வருக, வருக.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலை கடத்தலை எதிர்த்த முதற் குரல்:

# அமைச்சரே, சிலை அகற்றப் பணித்தீரா?

நாவலர் பெருமானின் சிலை கடத்தலை எதிர்த்து முதற் குரல் எழுப்பிய பெரியார் வண்ணை ந. சபாரத்தினம் அவர்கள். இப்பெரியார் அமைச்சின் ஆசீர்வாதத்துடன் சிலை அகற்றப்படுகிறது என்ற ஆணையாளரின் பிரசாரம் பற்றி அமைச்சருக்குப் பகிரங்கக் கடிதம் எழுதினர். இவரது கடிதமே அமைச்சின் பணிப்பாளர் மறுப்பு அறிக்கை வெளியிடக் காரணமாயிருந்தது. அறிக்கையின் முக்கிய பகுதிகளை இங்கே காணலாம்.

இந்து கலாசார அமைச்சு நாவலர் வாழ்ந்த இடத்தைச் சுவீகரித்து அதில் ஒரு கலாசார மண்டபம் அமைத்தது மகிழ்ச்சிக்குரிய செய்தி; வரவேற்கத்தக்கது. அக்காலக் கலாசார நிலையம் நிறுவும் போது நாவலர் சிலை வைப்பதற்கு இடம் ஒதுக்கியதாகத் தெரியவில்லை; ஒதுக்கியிருந்தால் அதற்கு அன்றைய நாவலர் சபை சிலைவைக்க இடம் ஒதுக்கியதாகத் தெரியவில்லை. ஒதுக்கியிருந்தால் அதற்கு அன்றைய நாவலர் சபையார் சிலைவைக்க இடம் ஒதுக்க வேண்டாமெனக் கூறியிருப்பர். அதற்கும் பல காரணம் உண்டு.

நிலையத்தை அமைச்சு தன்னிடம் பொறுப்பேற்குமாறு பணித்ததாக ஆணையாளர் கூறுகிறார். நல்லது. அதில் நல்லூர்கந்தசுவாமி கோயில் தெற்கு வீதியிலுள்ள மணிமண்டபத்தில் இருக்கும்நாவலர்சிலையைக்குப்பபை ஏற்றும் டிராக்டரில் ஏற்றி அந்திப் பொழுதில் யாருக்கும் தெரிந்தும் தெரியாமலும் அகற்றி வந்து கலாசார மண்டபத்தில் முன் விறுந்தையில் வைக்குமாறு பணிக்கப்பட்டதா? என அறிய விரும்புகிறேன்.

கலாசார நிலையத்துக்குச் சிலை தேவை எனில் புதிதாகச் செய்து அல்லது செய்வித்து வைத்திருக்கலாம்.

## சிலை அகற்றலுக்கு யாழ். பல்கலைக் கழக

# இந்து மன்றம் கண்டனம்

நாவலர் மணிமண்டபத்திலிருந்து எடுத்து வந்த சிலையை, நாவலர் வீதியில் அமைச்சு நிறுவிய நாவலர் கலாசார நிலையத்தில் நிறுவ அனுமதி வழங்க வேண்டாமெனவும் மீண்டும் மணிமண்டபத்திலே இருந்த இடத்தில் நிறுவ ஆவன செய்யுமாறு மீண்டும் பணிவன்போடு வேண்டுகின்றேன்.

நாவலர் சிலை கடத்தலை எதிர்த்துத் துணிவுடன் முதற் குரல் எழுப்பிய அமைப்பு என்ற பெருமை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து மன்றத்துக்கே உரியது. இம்மன்றம் பின்வரும் வேண்டுகோளை விடுத்திருந்தது;

* நாவலர் சிலையை அகற்றும் பொழுது முறையற்ற விதத்தில் அகற்றினீர்கள். ஆனால் இனியாவது பழைய இடத்திற்கு கொண்டு வரும்பொழுது அதற்குரிய மரியாதையோடு கொண்டு வந்துநிறுவ வேண்டும.

* இந்து அறிஞர்களதும் இந்து மக்களுடையதுமான பெருந் துயரினை உடனடியாக நீக்கிவைக்க வேண்டும்.

* இந்து மக்கள் எல்லோரதும் கண்டனங்களுக்கும் உள்ளாகாமல் நாவலர் சிலையை இருந்த இடத்திலே உடன் நிறுவுக.

* நாவலர் சிலையை அகற்றியதற்கான காரணங்களைத் தெளிவாக மக்களுக்கு உள்ளபடி எடுத்துக் கூறி,

* நாவலர் சிலையை எவ்வாறு முன்னர் கோயிலுக்குப் பக்கத்திலே அமைந்த மணிமண்டபத்திலிருந்து அகற்றினீர்களோ, அதே இடத்தில் மீண்டும் நிறுவப்பட வேண்டும்.

இந்து மக்களுக்குத் தாங்கள் செய்த இந்த தீய செயலுக்காக பகிரங்கமாக இந்து உலகிடம் மன்னிப்புக் கேளுங்கள்.

இவ்வறிக்கையை மேற்படி இந்து மாணவர் மன்றம் மறுத்துள்ளதாக நாவலர் சபையினர் பத்திரிகைகளுக்குக் கூறியிருந்தனர். எனினும மன்றம் இதுவரை உத்தியோகபூர்வமாக இதனை மறுக்கவில்லை எனபது குறிப்பிடத்தக்கது.

பண்பாட்டுணர்வு மிக்க உயர்கல்வி மாணவர் உலகு இதனை என்றுமே மறுத்துரைக்க முன்வராது என்பது உறுதி.

நாவலர் சிலையே மீண்டும் வருக, வருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பெருமான் சிலை கடத்தல் வரலாறு

> நாவலர் சிலை கடத்தும் சதித்திட்டம் கருவாகி, உருவாகி வளர்ந்த விதம் சுவையானது. ''ஈழநாடு'', நாவலர் சபை அறிக்கை ஆகியவற்றிலிருந்து சில பகுதிகளைத் தருகிறோம். அவை சதியை முழுமையாகக் காட்டும். மேலதிக விபரம் வேண்டுவோர்'' நாவலர் சிலை கடத்தல் - மூவர் அறிக்கைக்குச் சில விளக்கங்கள் என்ற ''13 பக்கப் பிரசுரத்தைப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

''நல்லூர் வீதியில் சிலை இருப்பது பொருத்தமற்றது. எனவே அங்குள்ள மண்டபத்தில் நாவலர் பெருமானின் பொருத்தமான நினைவுச் சின்னம் ஒன்றினை வைப்பதாக சபை முடிவு செய்தது''

'' ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் திருவுருவச் சிலையை இடமாற்றம் செய்வதென்று நேற்று நாவலர் வித்தியாலய மண்டபத்தில் நடந்த நாவலர் சபையின் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டதாக அறியப்படுகிறது'' – ஈழநாடு 18-8-85

''நாவலர் திருவுருவச் சிலையை இடம் மாற்றுவது பற்றி வந்த செய்தி தொடர்பாக அங்கு பேசிய பலரும் பலவிதமாகக் கருத்துக்களைத் தெரிவித்தனர் எனினும் அக்கூட்டத்தில் எவ்வித முடிவும் எடுக்கப் படவில்லை''

'இது சம்பந்தமான சகல விடயங்களையும் நாவலர் சபை கவனத்துக்கு எடுத்துச் சரியான இறுதி முடிவை எடுக்கும் என்பதில் எவரும் ஐயுறத் தேவையில்லை,

– ஈழநாடு 8 – 7 – 85

''நல்லூர் ஆதீனத்திலிருந்து பெறப்பட்ட வெல்வெட் பட்டுகளால் போர்த்திக் கௌரவமாகவே சிலை எடுத்துச் செல்லப்பட்டது. இந் நிகழ்ச்சி நல்லூர் நாவலர் மண்டபத்தில் நூற்றுக் கணக்கில் திரண்டு நின்ற பக்தர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இரகசியமாக அல்ல'' – ஈழநாடு

* * * *

''திரு. இ. வைத்தியலிங்கம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் நல்லூர் ஆலய வீதியில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்துக்கும் அம் மண்டபம் அமைந்துள்ள காணியில் இருக்கும் கிணற்றுக்கும் இடையிலிருக்கும் இடைவெளியை நல்லூர்த் தேர் வீதி வலம் வருவதற்கு வீதியாக உபயோகிக்க அனுமதி தர இயலுமா என்று கேட்டார்''

'' யாழ். மாநகர ஆணையாளரால் சபையின் தலைவருக்கு எழுதப்பட்ட கடிதம் பொதுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. நாவலர் சபை நாவலர் கலாசார மண்டபம் உருவாக்குவதில் ஊக்க சக்தியாக விளங்கியதெனவும் அதனால் நாவலர் பெருமான் பிறந்த காணியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் சபையின் செயற்பாடுகள் அனைத்தையும் நடத்துமாறும் அம் மண்டபத்துக்குப் புனிதமும், பொலிவுஞ் சேரும் வகையில் நாவலர் பெருமானின் திருவுருவச் சிலையை அங்கு எழுந்தருளச் செய்யுமாறும் யாழ். மாநகர ஆணையாளர் தமது கடிதத்தில் கோரியிருந்தார்.''

'' சபைக்கு அவ்வாறான யோசனை எதுவும் இல்லையெனவும் நாவலர் பெருமானின் திருவுருவச் சிலையை இடம் மாற்றுவதைப் பற்றிச் சபை சுதந்திரமான முடிவை எடுக்கிறதேயன்றி கோவில் நிர்வாகம் இது சம்பந்தமாகச் சபையுடன் ஒரு விதமான தொடர்போ, தூண்டுதலோ செய்யவில்லையெனவும், கோவிலாரின் கோரிக்கையினாலேதான் நாவலர் திருவுருவச்சிலை சபையினால் இடமாற்ற உத்தேசிக்கப்படுகிறது. என யாரும் தவறாக விளங்கிக்கொள்ள வேண்டாமெனவும் தலைவர் சிவசுப்பிரமணியம் வலியுறுத்திக் கூறினர்.

'' விக்கிரகம் என்ற அமைப்பு விதிக்கு அப்பால் உருவச் சிலையாகவே நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை நல்லூர் ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருப்பதால் அதனைக் கலாசாரச் சின்னமாகவே கொள்ள வேண்டும். அதனை நாவலர் கலாசார மண்டபத்திற்கு இடமாற்றம் செய்வதே பொருத்தமானது'' எனத் திரு கா. மாணிக்கவாசகம் கூறினர்.

– நாவலர் சபை அறிக்கை

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எந்நிகழ்ச்சிக்கும் நேரடிக் காரணத்தை விட மறைமுகக் காரணம் ஒன்றிருத்தல் பிரசித்தம். அம் மறைமுகக் காரணம் தார்மிக காரணம் ஆகும். நாவலர் சிலை 1969 இல் நல்லூர் வீதியிலேயே நிறுவப்பட வந்ததற்குத் தார்மிக காரணம் நல்லூர்க் கந்தசுவாமியாரிடம் நாவலர் கொண்டிருந்த ஆத்மிக உறவின் செறிவு. அதைப் பிரிக்க யாருக்குமே உரிமை இல்லை.

ஏழாலை சைவாவிருத்திச் சங்கம்.
துண்டுப் பிரசுரம் !

## நாவலர் சிலையே மீண்டும் வருக, வருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபைகள், சங்கங்கள் கண்டனம்

## சைவ பரிபாலன சபை கண்டனம்

" சைவசமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் ஈடு இணையற்ற தொண்டாற்றி ஈழத் தமிழர் புகழைத் தமிழ் வழங்கும் நிலமெல்லாம் பரவச் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் உருவச் சிலையை நல்லூர் ஆலய வீதியில் உள்ள நாவலர் மணி மண்டபத்திலிருந்து 17-08-1985 ஆம் திகதியன்று நாவலர் சபை நிருவாகிகள் வேறு இடத்துக்கு மாற்றிய செயலும் அவ்வுருவச் சிலையை எடுத்துச் சென்ற முறையும் சைவ மக்கள் மனதில் பெரும் வருத்தத்தையும் வெறுப்பையும் உண்டுபண்ணி உள்ளது.

நாவலர் சபையின் இச் செயலையிட்டு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினர் அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றார்கள் என்பதை நாவலர் சபையினருக்குத் தெரிவிப்பதென இச்சபை தீர்மானிக்கிறது"-இவ்வாறு சைவ பரிபாலன சபை வெளியிட்ட கண்டன அறிக்கை கூறுகிறது.

## விவேகானந்த சபையில் கண்டனம் மீண்டும் நிறுவுக எனக் கோரிக்கை

" நல்லூர்க் கந்தன் கோயில் தென் வீதியில் நிறுவப்பட்டிருந்த நாவலர் சிலை எங்கே? சிறுவர் முதல் பெரியோர் வரை பூரிப்புடன் வழிபட இருந்த இச் சிலை இன்று அங்கு காணப்படவில்லை.

இச் சிலை ஆதாரமற்ற முறையில் கறுத்தத் துணியால், மரணதண்டனை பெற்ற கைதி போன்று மூடப்பட்டு, குப்பையேற்றும் வாகனம் ஒன்றில் எங்கோ எடுத்துச் செல்லப்பட்டதாக அறிகிறோம். ஏன் இதனைச் செய்தார்கள். இதன் பின்னணி என்ன என்பது தெரியவில்லை." இவ்வாறு வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். (வீரகேசரி 1-10-85)

## நல்லூர் வீதியில் நாவலர் சிலை ஏன்?

## ஏழாலை சைவாபிவிருத்திச் சங்கம் கூறும் காரணங்கள்

1. நாவலர் மகிமைக்கும் அவரிடம் விளங்கிய சைவத் தூய்மைக்கும் சகல வகையிலும் பொருத்தமான இடம் அது.
2. குழந்தைகள் முதல் வயோதிபர் வரையுள்ள சைவ மக்கள், சகலதரப்பினருந் தரிசிக்க வாய்ப்பான இடம் அது.
3. தினசரி கோயில் தொழுவோர் சுவாமியைத் தொழுத உள்ள அமைதியோடு காலவரையுந் தொழ வைத்தல் மூலம் ஒரு சமயத் தலைவனை அச்சமயத்தவர்கள் சதா கண்டு தொழும் உயரொழுக்கம் நிலவுதற்கேற்ற இடம் அது.
4. திரிபுண்டரக் கோலமும், தியான பாவனையும், கந்தபுராணமுங் கையுமாய் சைவக்கலை ததும்பும் அச்சிலையின் நிலை கோயில் வீதியே தனக்கிடமெனத் தானே சொல்லும்.
5. நாவலரே தற்காலிகமாகத் திருமடம் அமைத்துத் திருவாவடுதுறை ஓதுவார்களை வரத்தித் திருமுறைப் பஜனையும் மகேஸ்வர பூஜையும் சற்பிரசங்கமும் நடாத்தியதால் பிரத்தியேகமாக சமயத் தூய்மை பெற்ற இடம் அது.
6. நாவலர் கருத்தின்படி சைவ மக்களிற் பெரும்பான்மையினருக்குப் பலன் படத்தக்கவாறு சிவபுராண படனம், சற்பிரசங்கம், சைவ சித்தாந்த வகுப்பு முதலியன (நாவலர் முகவொளியில்) நடைபெறுவதற்கு ஏற்ற இடம் அது.
7. மதிப்புக்குரிய பண்டிதமணி கணபதிப்பிள்ளை பேராசிரியர் சின்னத்தம்பி ஆகியோரின் ஆலோசனையின் பேரில் முன் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் அது.
8. நாவலர் சிலை தாபிப்பதற்கென்றே பிரத்தியேகமான அமைப்பும் வனப்பும் பொருந்தப் பல்லாயிரம் ரூபா செலவில் அமைந்த கெம்பீரமான மணிமண்டபம் உள்ள இடம் அது.
9. பதினறு வருடங்களாக நாவலர் சிலை இருந்து வந்ததன் பேரில் அச்சிலைக்கே ஆட்சியுரிமை பெற்றுவிட்ட இடம் அது.
10. பிதிரார்ச்சிதமாகவும் சுயஹோதாவிலும் தமது குலதெய்வமாய்ப் போற்றி நாவலர் கந்தசுவாமியார் மீது கீர்த்தனைகளும் மங்கலமும் பாடிய வகையால் நாவலர் ஆத்மஒளி பதிந்த இடம் அது.

(தொடர்ச்சி 13 ஆம் பக்கம்)

**நாவலர் சிலையே மீண்டும் வருக, வருக.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலை அகற்றலும் நாவலர் சபைப் பணியா?

நாவலர் சபையினரை நோக்கி சி. செ. சோமசுந்தரம் அவர்கள் வெளியிட்ட கண்டன அறிக்கை

பெரும் ஆனந்தக் களிப்புடனும், பெருமதிப்புடனும் ஐந்தாம் குரவரெனப் போற்றப்பட்டவருக்குத் தாபிதமான சிலைக்கு இன்று நடந்ததென்ன? சைவ உலகிற்கு இருட்டடிப்புச் செய்து சுபாசுப கருமங்களுக்கு ஒவ்வாத மரணயோகச் சூனியத்திதி நாளில் அந்தகப்பிரகரன் ஆட்சிசெய்யும் வேளையில் உள்ளூராட்சிச் செருக்கு அடக்குமுறை ஏவல் பேய்களின் தலையாட்டக் குரங்காட்டத்தில் சிக்குண்டு ஏமாந்தோரினால் 17-8-85 சனிக்கிழமை இரவோடிரவாக அசுர வேகத்தில் அகற்றப்பட்டு விட்டது, பானை வனைபவனுக்குப் பலநாள் வேலை பொல்லடி போடுபவனுக்குக் கணப்பொழுதுக் கருமம் என்ற மொழிபோல் முடிந்து விட்டது இச்சமய விரோதச்செயல்

சைவ உலகின் பேரதிர்ச்சிக்கும், வேதனைக்குமுரிய இச்செய்கை ஒரு விதத் தக்க யாகந்தான். கந்தபுராணம் படிப்பவர்களும் படிக்க வைப்பவர்களும் கந்தசுவாமி கோவில்களை நடத்துபவர்களும் இதை உணர்வர். தக்க யாகத்திற்கு ஒத்தூதியோரும் அதனைப் பார்த்தவர்களும் பெற்ற பரிசிலை, இச்சிலை அகற்றலில் முன்னின்றவர்களும், கலந்துகொண்டோரும் பெறும் பொழுதுதான் இதன் விதைப்பும் விளைவும் பயனும் விளங்கும்.

இச்சிலை அகற்றிய வெற்றிப் பிரதாபத்தை ஏதோ பெரும் சிவஞானப்பேறு பெற்றுவிட்டதாகக் கொழும்பில் ஆழ்துயிலிலிருந்த தங்கள் பரமார்த்த குருவிற்கு நடுநிசியில் தொலைபேசிமூலம் தெரிவித்தாராம் பாதகச் சீடனொருவர். பரிதாபம அந்தோ என்னபரிதாபம.

நாவலர்சிலை அமைப்புக் காலத்தில் வெளியான நாவலர் மாநாட்டு மலரில் "இன்னும் பல பணிகளைச் செய்வதற்கு இச்சபை திட்டமிட்டுள்ளது. பொது மக்களின் தாராளமான ஒத்துழைப்புடன் அவற்றை எல்லாம் காலப்போக்கில் எமசபை நிறைவேற்றும்" என அந்நாள் நாவலர் சபைத் தலைவர் கூறியிருக்கக் காண்கின்றோம்.

அன்று அவர் கூறியிருந்த பல பணிகளில் நாவலர் சிலை அகற்றலும் ஒன்றா? எனவும் அதனையும் பொது மக்களின் ஒத்துழைப்புடன் தான் செய்தீர்களா? எனவும் அவரை யாம் இந்நேரத்தில் கேட்க விரும்புகின்றோம். மேலும் இச்சிலையை அகற்ற அதிகாரந் தந்த மொட்டையர் தலைகள் தொகை எத்தனை என்பதனை வெளிக்காட்ட முடியுமா? என்பதனையும் வினயத்துடன் அவரிடம் வினவுகின்றோம். இரகசியமா உங்கள் மாயைக்குத் தலையசைத்தோர் தொகையைக்காட்டிலும் பரகசியமாக எதிர்த்தோர்கள் தொகை பல்லாயிரம் என்பதை உணர்ந்தும், அலட்சியமாக நீதி நெறி தவறி நடந்தது நியாயமா? அநியாயம்! இன்று இலங்கைக் கணக்காளர் இவ்வநியாயச் செயலைத் தூற்றி எதிர்வார்த்தைகள் பேசுவது உங்கள் செவிக்கு எட்டுகின்றனவா? மனச்சாட்சி என்ன சொல்லுகின்றது?

உண்மையில் நாவலரை உணர்ந்தோர் அபிமானமுடையோர் யாரேனும் நாவலர் சபையில் இருந்திருப்பின், இவ்வீனச் செயலைச்செய்ய உடன்பட்டிருப்பார்களா? அப்படி யாரேனும் இருந்திருப்பின் உடன் சபைத் தொடர்பைத் துண்டித்திருப்பரே, இவ்வீனச் செயலைச் செய்தோருக்கு நாவலர் பெயரில் சபை வைத்து இயக்க அருகதையுண்டா? சமய உணர்வுள்ள பெரியோரை மதிக்கும் மரபினர் செய்யும் வேலையா இது? இம்மதிகெட்டவர்களைச் சைவ உலகம் தொற்று நோயாளிகளாகவே மதிக்கும். இம்மதிகெட்ட செயலுக்கு உடன் பிராயச்சித்தம் காணப்படாவிடின் சைவ உலகம் இதனை மன்னிக்கவோ, மறக்கவோ மாட்டாது.

"பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவுமில்லை; என்னை அவமதிக்கவுமில்லை; சைவசமயிகளாலே அவமதிப்பும், இடையூறுஞ் செய்யப்படுகின்றன" – இக்கூற்றுக்கள் 1868ஆம ஆண்டில் நாவலர் வாக்கிற் பிறந்து எழுத்தில் வந்தவை. இவ் அவமதிப்பை 1985 ஆவணியில் அவர் பெயரால் இயங்கும் நாவலர் சபையினரே அவருக்குச் செய்வார்களாயின், இவர்களுக்குச் சூட்டக்கூடிய பெயர் என்னவாக இருக்கலாம்? கூசாது நாவலர் சபை யாரென்னுது 'நாவலர் விரோதிகள், சுயநலமிகள், என்று கூறிக்கொள்ளலாம்.

வெட்கம் கெட்ட நாவலர் சபை நாவலர் விரோதிகளே! உங்கள் அறியாமை மாசைப் போக்கவும் இந்நாட்டுச் சைவர்களது மனக்கவலையை நீக்கவும் மாற்று மருந்தை உடன் நாடுங்கள். விரைமின், விரைமின். பாவ விமோசனத்திற்குப் பிரார்த்திக்கின்றோம்.

## நாவலர் சிலை மக்கள் சொத்து மணிமண்டபத்தில் மீள நிறுவுதல் கடமை

[கலாநிதி சி. க. சிற்றம்பலம், தலைவர், வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்]

நாவலர் சிலையை நல்லூர்க் கந்தன் ஆலய முன்றிலிலிருந்து அகற்றியது... இந்து உலகைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது.... நாவலர் சபையினர்... இன்னொரு சிலையை நாவலர் கலாசார மண்டபத்தில் நிறுவியிருக்கலாம். இவ்வாறு செய்யாதது தவறே... நாவலர், நாவலர் சபையினருக்கு மட்டும் உரியவரல்லர்... நாவலர் சபையினர் இச்சிலை நகர்த்தல் பற்றிய தமது முடிவை மீளாய்வு செய்தல் அவசியமாகிறது. நாவலர் சபை தனது முடிவை மாற்ற இன்னும் காலம் கடக்கவில்லை. கலாசார மண்டபத்திலிருந்து அவரைப் பழைய இடத்திற்குக் குடிபுக வைப்பது நமது கடமை.

— நன்றி: வீரகேசரி

## நாவலர் சிலையே மீண்டும் வருக வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆலய அறங்காவலர்

## சிலை கடத்தலுக்கு உடந்தையா?

''நாவலர் சிலை நகர்ந்தது ஏன்?'' என்ற பிரசுரத்தின் சில பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன.

### நாவலர் சிலை நகர்ந்தது ஏன்?

நவலர் உயிரோடு வாழ்ந்த காலத்தில் உயிர் வாழ்ந்த நல்லூர் கந்தன் காவலர் மாப்பாணர் ''சைவத்தின் சீர்திருத்தச் செம்மல்'' (Champion-Reformer of Hindus) என்று சேர். பொன். இராமநாதனுல் போற்றப்பட்ட நாவலரின் பரம விரோதியாக இருந்தார் ஆலயம் ஆகம விதிப்படி நடக்க வேண்டுமென நாவலர் கூறினுர். ஆலயங்கள் மக்கள் உடைமை. அதனை அறங்காவலர் சுரண்டக் கூடாது. ஆலய அறங்காவலர் ஒழுக்க சீலராக இருக்கவேண்டும். கல்வியில் வல்லவராக இருக்கவேண்டும். இப்படி எல்லாம் நாவலா கூறினுர். நல்லூரக்கு மட்டும் அவர் இதனைக் கூறவில்லை. ஆகம விரோத ஆலயங்கள் அனைத்துக்கும் பொதுவாகக் கூறினுர். ஆனுல் நல்லூர் நாவலரை நல்லூர் மாப்பாணர் பரம்பரை மட்டும் பகைத்தது சுயநலமே. நாவலர் மீது அவர்கள் பகைகொள்ளக் காரணமாயமைந்தது.

''நீ செய்யாவிட்டாலும் உன் அப்பன்; அவனில்லா விட்டாலும் உன் பாட்டன் குளத்தைக் கலக்கியிருப்பார்கள்'' என்பது ஆட்டுக் குட்டிக்கு ஓநாய் கூறிய உபதேசம். இன்றைய அறங்காவலரின் நியாயமும் இது தான். ''நாவலன் எனக்கு எதுவும் செய்யாவிட்டாலும் எனது பாட்டன், பூட்டன், கொப்பாட்டன் பரம்பரை அனைத்தையும் கேவலப்படுத்தினுன், ஆகவே, நாவலனின் சிலை எனது பரிபாலனத்தின் உட்பட்ட பகுதிக்குள் இருக்க முடியாது. அதனை அகற்றியே தீருவேன்'' என்பதே அறங்காவலரின் அறை கூவல், ''இக்கோவிலார் செய்கையெல்லாஞ் சிறுபிள்ளை விளையாட்டு'' என்று நாவலர் (நல்லூர் கந்தசுவாமி கோயில் II, 1875) கூறுகிறுர். அது இன்றும் உண்மையாகவே உள்ளது.

நாவலர் காலத்தில் சைவத் தமிழ் உலகம் முழுவதும் நாவலரின் பின்னணியில் நின்றது. மாப்பாணர் பரம்பரை நாவலரை எதுவும் செய்ய முடியவில்லை. அதன் பின்னரும் மாப்பாணர் பரம்பரை நாவலர் கருத்துக்களுக்கு எதிராக மக்களை அணி திரட்ட முடியவில்லை. ஆனுல் இன்று, நாட்டில் பேயரசு செய்கிறது. சாத்திரங்களை பிணம் தின்கின்றது. எனவே பேயும் இயங்க அஞ்சும் நள்ளிரவிலே நாவலர் சபையில் கள்ளத்தனமாக புகுந்த வஞ்சகர்களால், ஆகம மரபுப்படி நிறுவப்பட்ட ஐந்தாம் குரவரின் திருவருவம் அடித்து உடைத்து அகற்றப்பட்டது. தமிழ் மக்களின் தலைநகரிலிருந்து ஸ்ரீ லங்காத் தலைநகருக்குச் சென்று நாவலர் சபை நாவலரைக் கடத்த முடிவு செய்தது.

1969 ஆம் ஆண்டு முதல் போட்ட திட்டம் இரவோடிரவாக நாவலர் சபையின் உறுப்பினரான 'புதிய வரின்' மாநகரப் பேயாட்சியில் இரவோடிரவாகத் திருப்பப்பட்து. மூடப்பட்டிருக்கும் அடிமைச் சின்ன நிலையத்தில் இன்று நாவலர் ''பணயக் கைதி'' யாக வைக்கப்பட்டுள்ளார்.

நாவலரை மீட்டு வந்து அவரது புனித மண்டபத்தில் மீண்டும் பிரதிட்டை செய்வது தமிழர்கடமையாகும்.

நாவலர் எழுச்சியின் வடிவம்.

நாவலர் தமிழின் உயர்ச்சியின் வடிவம்.

நாவலர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட இடத்திலிருந்து அகற்றப்பட்டது இனத்தை எதிர்நோக்கும் இடர்களின் முன்னறிகுறி

பிராயச்சித்தாபிஷேகட முதலிய கிரியைகளோடு மீண்டும் நாவலர் சிலை புநராவர்த்தனம் செய்யப்படவேண்டும்.

இல்லையேல் தமிழினத்தை இருள் சூழ்ந்து அலைக்கழிக்கும்.

## சிலை மீண்டும் வரக் குரல் கொடுங்கள்

### ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் பணி மன்றம் வேண்டுகோள்

''யாழ்ப்பாண மக்களுக்கு நாவலர் மீது பற்றில்லை; யாழ்ப்பாண மக்கள் சிலை கடத்தல் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை'' என்று யாழ். மாநகர ஆணையாளர் செய்திக் கதிர் இதழில் கூறியுள்ளார். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிகளற்ற நிலையில் ஆணையாளர் நகரத்தின் முதற் குடிமகன் என்ற சிறப்பு நிலையில் உள்ளார். அவரது கூற்று யாழ் நகர மக்களை மட்டுமன்றி முழு தமிழினத்தையுமே அவமதிப்பதாகவும் கவலையுள் ஆழ்த்துவதாகவும் உள்ளது.

(தொடர்ச்சி 15 ஆம் பக்கம்)

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கூற்றுக்கள் முழுவதும் பொய் என்று காட்டப்பட வேண்டிய பொறுப்பு உலகல் தமிழர்க்கு உண்டு. தமிழர் நாவலர் மீது கொண்ட பற்றை எடுத்துக் காட்டும் வகையில் மக்களும் பொது நிறுவனங்களும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டு சிலை மீண்டும் பழைய இடத்தில் நிறுவப்பட வேண்டும் என்றும் கோரவேண்டும் தீர்மானம் நிறைவேற்றி ஆணையாளருக்கும் இந்துகலாசார அமைச்சருக்கும் யாழ். அரசாங்க அதிபருக்கும் அனுப்ப வேண்டும். ஒரு பிரதியை 'நாவலர் குரல்' அலுவலகத்துக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

நாவலர் பணி மன்றச் சார்பில் அதன் தலைவர் பண்டிதர் மு. கந்தையா பீ. ஏ. அவர்களும் செயலர் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளையும் வெளியிட்டுள்ள அறிக்கையை இங்கே முழுமையாகத் தருகிறோம்.

ஊருக்குகூர் நிலவுஞ் சைவ வித்தியாசாலைகள், சைவ சங்கங்கள், இந்து வாலிபர் சங்கங்கள், சைவப் பணிமன்றங்கள் சிவாலய தர்மகர்த்தா சபைகள், என்ற அனைத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானை இன்றியமையாதவை. நாவலர் பெருமானின் தன்னலங்கருதாத தமிழ் சைவ சேவைகளைத் தொடர்ந்தியற்றி வருபவை என்ற மஹிமைக்குரியவை. நாவலர்க்கும் இவ் ஸ்தாபனங்களுக்கும் இடையிலான தொடர்பை ஒரு ஆலய மூலமூர்த்திக்கும் பரிவார மூர்த்திகட்கும் இடையிலான தொடர்பென வர்ணிக்கலாம்.

நல்லூர்க் கோயில் வீதியில் வீற்றிருந்த நாவலர் சிலை இரவோடிரவாகக் கடத்தப்பட்ட செய்தி பிரசித்தமானது. அதிற் சம்பந்தப்பட்டவர்களால் அதற்குக் கொடுக்கப்பட்ட விளக்கங்கள் பொய். விளக்கங்கள் என்ற நிலை 24, 29,-98-85ஆம் தேதிகளில் வெளியான எமது மன்றப் பிரசுரங்களால் உறுதி செய்யப்பட்டுள்ளமை கண்கூடு. இதனால் நாவலர் மகிமைக்கு ஏன்? நல்லூர் மகிமைக்குங் கூடப் பாதிப்பு ஏற்படுத்தப்பட்ட அளவிலன்றி இரண்டின் பேராலும் பொய்யுங் கட்டவிழ்த்து விடப்படுகிறதே! நாவலர் பெயரால் பொய்யெழுந்லை பரவ பார்த்துக்கொண்டு வாளாவிருக்கும்வரை நாமும் பொய்க்குத் துணை செய்த பொல்லாப்பாழிக்கு உரியவர்கள் ஆவமன்றோ. இனி பெரிலைம் அடசத்தகமலை

திரிபுண்டரக் கீற்றுக்களின் பொலிவும், திருமுகத்தில் தியானங்களையும், திருக்கரத்தில் கந்தபுராணமுந் தாங்கித் தெய்வீகம் பொலியும் சிலைத்தோற்றமே இலை கோயில் வீதியில்தான் இருத்தற்குரியதென்பதைச் சொல்வதாயிருக்க, இதற்கு மாற்று விளக்கஞ் சொல்லி மழுப்ப முயலுதல் மகா அநீதி, அடாவடித்தனம் என்பது வெளிப்படை

நவலரால் பெருமை பெறும் சைவ ஸ்தர்பனங்கள் நாவவர் பேரிலான இந்த அநீதியை எதிர்த்து ஒரே குரலாகக் கோஷமெழுப்ப வேண்டும். நல்லூர் கோயில் வீதிக்கே நாவலர் சிலை மீளவேண்டும். என்ற கோரிக்கையை ஒவ்வோர் ஸ்தாபனமும் தனித்தனிப் பிரசுரங்களாற் பிரசித்தஞ் செய்ய வேண்டும். இதை முன்னெடுத்துச் செல்லும் உத்தரவாதப் பொறுப்பு தனக் குண்டு என்ற நிலைமை ஒவ்வோர் ஸ்தாபனமும் பகிரங்கப்படுத்த வேண்டும் தேசிய முக்கியத்துவம் பெற்ற இவ் விஷயத்திற் பாராமுகம் பண்ணுந் தினசரிகள் விசேடமாக்க் குடாநாட்டுத் தினசரிகளின் கவனத்தை ஈற்க்குமளவில் சைவ ஸ்தாபனங்களின் குரல் எழுந்தொலிக்க வேண்டும்.

சைவ மகிமையின் பேரால், நல்லூர் மகிமையின் பேரால், நாவலர் மகிமையின் பேரால், இதனைச் செய்து, நாவலர் சிலை மீளவும் யதாஸ்தானத்க்கு மீள வைக்கும் நிலையை உருவாக்கி வைக்குமாறு அகில ஈழச் சைவ ஸ்தாபனங்களையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

## ஆறுமுகநாவலர் சபைத் தொண்டர்களின் மறைவுக்கு பணிமன்றம் அஞ்சலி

"தமிழ் மக்களின் அன்புக் காணிக்கையின் ஒரு சிறுபகுதியாகச் சிலை நாட்டப்படுகிறது. இச் சிலை வருங்காலச் சந்ததியின் உள்ளத்தே நம்பிக்கையையும் பேருணர்வையும் ஊட்டுவதாக!

பொது மக்களின் தாராளமான ஒத்துழைப்புடன் பல பணிகளைக் காலப்போக்கில் எம் சபை நிறைவேற்றுவதாகும்'' என்று பொது மக்கள்மீது அளப்பரிய நம்பிக்கை கொண்டு நாவலர் பணிகளை ஆற்றத் தொடங்கிய நாவலர் சபைத் தலைவர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்களின் மறைவு குறித்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. நாவலர் பெருமானின் சிலையை மீண்டும் அவர் தலைமையில் அமைந்த மணிமண்டபத்தில் மீள நிறுவுவதன் மூலம் அவரது ஆத்மசாந்திக்கு உழைக்க ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றம் உறுதிபூண்டுள்ளது — இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றம் தனது அஞ்சலிச் செய்தியிற் குறிப்பிட்டுள்ளது.

"நாவலர் பெருமான் சிலையை அகற்றுவதை இறுதி மூச்சுவரை எதிர்த்து சிலை அகற்றுவதற்கு மாற்றாக நாவலர் பொருமான் சிலைக்கும் பழனி ஆண்டவர் சந்நிதிக்குமிடையேயுள்ள பகுதியினூடாக முருகப்பெருமானின் தேர்ப் பவனி நடைபெற வேண்டுமென்று போராடித் தோற்று, மனமுடைந்து நோயுற்ற பொறியியலாளர் திரு. இ. வைத்திலிங்கம் அவர்களது மறைவு குறித்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. அவரது மறைவு நாவலர் அன்பர்களுக்குப் பேரதிர்ச்சி தருவதாகும்'' — இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றத் தலைவர் பணடிதர் மு. கந்தையா பீ. ஏ. அனுப்பிய அஞ்சற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெடுகுடி சொற்கேளாது

## நாவலர் சபை பண்டிதமணி ஐயாவின் சொல்லை மீறியது

நாவலர் பெருமானது சிலையை இப்பொழுது உள்ள இடத்தில் இருந்து (நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இருந்து) எடுக்கும்படி சொல்ல எவருக்கும் அதிகாரமில்லை — என்று என் கருத்தை இற்றைக்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் நாவலர் சபையின் இணைச் செயலாளரிடம் தெரிவித்தேன். அத்துடன் என் கருத்தை எனது மாணவர், ஆசிரியர் திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கள் வாயிலாக எழுத்து மூலம் நாவலர் சபையின் தலைவர் (நீதியரசராய் இருந்த திரு. வீ. சிவசுப்பிரமணியம்) அவர்களுக்கும் தெரியப்படுத்தினேன்.

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

**ஓங்கும் குரல்களுக்கு நடுவே ஒடுங்கி ஒலிக்கும் தனிக்குரல்!**

## பொதுமக்கள் அலட்டவில்லை

இன்று இந்த நாவலர் சிலை விவகாரத்தில் சாதாரண பொதுமக்கள் அலட்டிக் கொள்ளவில்லை.

—ஆணையாளர் சி. வி. கே. சிவஞானம்

## யாழ்ப்பாணிகள் வாய்ச்சொல் வீரர்!

நாவலர் பெருமானை ஐந்தாம் குரவர் என்று சொல்லிக்கொள்வதுடன் மட்டும் பெருமை கொள்ளும் யாழ்ப்பாணச் சைவப் பெருமக்கள் நாவலர் பெருமானுக்குப் பல கோயில்களிலும் சிலை எடுத்து ஐந்தாம் குரவர் என்பதை நிலை நாட்டியிருக்கலாம். எவரும் முயற்சிசெய்யவில்லை.

''கொழும்புத் தமிழர்கள்'' என்று சொல்லப் படுபவர்கள் நாவலர் சபை ஒன்றைத் தொடங்கி நாவலர் பெருமானுக்கு வெங்(ண்)கலத்தில் பெரிய அளவில் முழு உருவச் சிலை வடித்து கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து...... வைத்தனர்.

— சி. வி. கே. சிவஞானம்

(சோம்பிக் கிடக்கும் மகனுக்கு வீர மூட்டத் தாயைக் கொல்ல வேண்டுமென்பர். நாவலர் சிலையை உடைத்து அகற்றியதன் மூலம் யாழ்ப்பாணிகளுக்கு உணர்வூட்டிய ஆணையாளருக்கு யாழ்ப்பாணம் பெரிதும் கடமைப்பட்டது.)

## வேலிக்கு ஓணான் சாட்சி

நல்லூரிலிருக்க நாவலரே விரும்பவில்லை என்று செங்கை ஆழியான் செய்திக் கதிரில் எழுதினர்.

நாவலர் பெருமான் வாழ்ந்த காலத்தில் நல்லூர்க்கந்தசுவாமிகோயில் அமைப்பிலும் நடைமுறையிலும் கருத்துவேறுபாடு கொண்டு நல்லூருக்கே பல வருடங்கள் செல்லாதிருந்தார் என்பதைச் செங்கை ஆழியான் (ஆர் + ஆய்ச்சி மூலம்) எடுத்துக் காட்டிருந்தார்.

○ ○ ○

சைவசிகாமணி திரு. க. சிவராமலிங்கம் சென்ற இதழில் எழுதிய கட்டுரையில் நாவலர் பெருமான் இருக்க வேண்டிய இடத்தில் (அதாவது மக்களின் உள்ளத்தில்) இல்லையே என்று எழுதியிருந்தார் (உள்ள அறுவை ஆய்வில் வல்லார் போலும்!)

— ஆணையாளர்
சி. வி. கே சிவஞானம்
(செய்திக் கதிரில்)

இவ்விதழ் யாழ்ப்பாணம், 411/1, காங்கேசன்துறை வீதியில் இருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றத்தினரால், யாழ்ப்பாணம், ஸ்ரீ காந்தா அச்சகத்தில் 1985-12-04 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**நாவலர் சிலையே மீண்டும் வருக வருக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org